அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 18.

தமிழ்த்துறை

தமிழ் இலக்கிய வரலாறு
(18BTA34C)

முனைவர் கோ. குருசாமி
உதவிப்பேராசிரியர்

கைபேசி: 9003780832

## அலகு - II

1. காப்பியங்கள்
2. தமிழ் இலக்கியம் சமயமாதல்
3. பொது இலக்கியங்களைத் தரப்படுத்தும் முயற்சி

### 1. காப்பியங்கள்

மயிலைநாதர் உரைநூற் உரையாசிரியர்கள் ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம் என வகைப்படுத்தியுள்ளதைப் பார்க்க முடிகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். சூளாமணி, நீலகேசி, உதயணகுமாரகாவியம், நாககுமாரகாவியம், யசோதர காவியம் ஆகிய ஐந்தும் ஐஞ்சிறுகாப்பியங்களாகும்.

__சிலப்பதிகாரம்__ . காலம் கி.பி. 2-ம் நூற்றாண்டு, ஆசிரியர் இளங்கோ அடிகள், அந்த சமணத்துறவியால் எழுதப்பட்ட சிலைக்காப்பியம். தமிழின் முதல் காப்பியமான இது புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. புகார்காண்டம்-10 பிரிவுகளையும், மதுரைக்காண்டம்.13 பிரிவுகளையும், வஞ்சிக்காண்டம்-7-பிரிவுகளையும் உடையது. 30-காதைகளைக் கொண்டது. 4934 வரிகளைக் கொண்டது.

__மணிமேகலை__ :- தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம். இது பௌத்த மதக்கருத்துக்களைப் பரப்புவதற்காகவே பாடப்பட்டுள்ளது. ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார். மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு. 30 காதைகளால் ஆனது. ஆசிரியப்பாவினால் எழுதப்பட்டுள்ளது. 4286 அடிகளைக் கொண்டுள்ளது.

__சீவகசிந்தாமணி__ :- சமண மதக்காப்பியம், சீவகன் என்ற பெயர் கொண்ட கதைத்தலைவன். முதன்முதலில் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட காப்பியம். 9-ம் நூ. சீவகன் எட்டுப் பெண்களை மணந்து பின் துறவு மேற்கொள்கிறான். இதற்கு மணநூல் என்ற பெயரும் உண்டு, 3145 விருத்தப்பாவினால் 13 இலம்பகங்களாக அமைந்துள்ளது.

வளையாபதி :- சமணக்காப்பியம், இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை, சில பாடல்கள் கிடைத்துள்ளன. 73-பாடல்களே இப்போது உள்ளன. ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. காலம் 10ஆம் நூற்றாண்டு என்பர்.

குண்டலகேசி . இது புத்த சமயக்காப்பியம், காப்பியத் தலைவியின் பெயரால் பெயர் பெற்ற நூல். ஆசிரியர் நாதகுத்தனார். புத்திரட்டில் உள்ள பாடல்களைத் தொகுத்து 25-பாடல்களாக அமைந்துள்ளன. குண்டலகேசி விருத்தம் என்ற பெயரும் உண்டு.

## ஐஞ்சிறு காப்பியங்கள்

சூளாமணி :- சமணர்களால் போற்றப்பட்ட காப்பியம் இது. ஆசிரியர் தோலாமொழித்தேவர். விருத்தப்பாவால் ஆனது. 12 சருக்கங்களாக 2131 பாக்களையுடையது.

நீலகேசி :- புத்த சமயத்தைப் பரப்பிய குண்டலகேசியை நீலி என்ற சமணப்பெண் எதிர்த்து வாதிட்டதால் நீலகேசி ஆயிற்று. "நீலகேசி தெருட்டு" என்னும் பெயருண்டு. 894-விருத்தங்களை உடையது. 10 சருக்கங்களை உடையது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

உதயணகுமார காவியம் :- சந்திரன் உதிக்கின்ற காலத்தில் பிறந்ததால் உதயணன் எனப் பெயர் பெற்ற அரசகுமாரனின் கதையைச் சொல்வதால் இப்பெயர் பெற்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 6 காண்டங்களை உடையது. 387. விருத்தப்பாக்களால் ஆனது.

நாககுமார காவியம் :- மகத நாட்டு மன்னன் நாககுமாரனின் கதையைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. 170 விருத்தப் பாக்களால் அமைந்தது. ஐந்து சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

யசோதர காவியம் :- வடமொழியின் தழுவல் காப்பியம், இக்காப்பியத்தை வடமொழியில் எழுதிய ஸ்ரீவாதிராஜ முனிவர் தான் தமிழில் எழுதினார் என்ற கருத்தும், வெண்ணாவலுடையான் வேள் என்ற தமிழரின் படைப்பு என்பதும் சிலர் கருதுகின்றனர். 320 செய்யுட்களை உடையது 5 சருக்கங்களைக் கொண்டது.

பெண்ணியப் பார்வையில் சிலப்பதிகாரம் என்ற கருத்தை மையப்படுத்தி காப்பியங்களில் உள்ள பெண்ணிய கதாபாத் திரங்களின் தன்மை பேசப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் அரசர்கள் கையாண்ட அதிகாரப் போக்குகள், இரட்டைக்காப்பி யத்தில் வெளிப்படும் இரண்டு பெண்ணிய பாத்திரப் படைப் புத் தன்மைகள் பேசப்படுகின்றன.

## 2. தமிழ் இலக்கியம் சமயமாதல்

**பக்தி இலக்கியங்கள்:-** பிற்கால சோழர் காலத்தில் சமணமும் பௌத்தமும் அழிக்கப்பட்ட நிலையில், சைவமும், வைணவமும் தோன்றின. அப்பாடல்களை நம்பியாண்டார் நம்பி தொகுத்துத் தந்தார். அது பன்னிரு திருமுறைகள் என வழங்கப்பட்டது. வைணவப் பாடல் பாடல்களை நாதமுனி கள் என்பார் தொகுத்தார்.

பன்னிரு திருமுறை நூல்கள் - முதல் மூன்று திரு முறைகள் சம்பந்தர் பாடியவை. கி.பி. 7-ம் நூ. 4168 பாடல் களைக் கொண்டது. 16 ஆண்டுகளே வாழ்ந்தார். இவர் சிதம்பரத்தி ற்கு அருகிலுள்ள சீர்காழி இடத்து உள்ளார்.

நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் அப்பர் பாடியவை. இவரை திருநாவுக்கரசர் என்றும் அழைப்பர். 3066 பாடல்கள் உள்ளன. 81 ஆண்டுகள் வாழ்ந்தார்.

ஏழாம் திருமுறை சுந்தரர் பாடியது. 1026 பாடல்களைக் கொண்டது. இறைவனே முதியவர் வடிவில் வந்து தடுத்தாட் கொண்ட சமயக் குரவர். பித்தா என்று இறைவனை அழைத்துப் பாடியதால் வன்தொண்டர் என்ற பெயரும் பெற்றார்.

எட்டாம் திருமுறை மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும். திருவாதவூரைச் சார்ந்த வர், என்பதால் 'திருவாதவூரர்' என்ற பெயர் பெற்றார். 659 பாடல்களைக் கொண்டது.

ஒன்பதாம் திருமுறையைப் பாடியவர்கள் திருமாளிகைத் தேவர் உள்ளிட்ட ஒன்பது பேர், மொத்தம் 301 பாடல்கள் உள்ளன.

பத்தாம் திருமுறை திருமூலர் எழுதிய திருமந்திரம், 7-ம் நூ. 3000 பாடல்களைக் கொண்டது.

9. தந்திரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. 232 அதிகாரங்களையுடையது. பதினோராம் திருமுறை திருவாலவுடையார், காரைக்கால் அம்மையார், நம்பியாண்டார் நம்பி முதலிய 12 அடியார்கள் பாடிய 40 நூல்களை உடையது. பன்னிரண்டாம் திருமுறை - பெரிய புராணம். ஆசிரியர் சேக்கிழார். அருள்மொழித்தேவர் என்றும் அழைக்கப்பட்டார். இது இரண்டு காண்டங்களையும் 13 சருக்கங்களையும் உடையது. 4000-ம் மேற்பட்ட பாடல்களைக் கொண்டது.

நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் :- திருமாலை வழிபடுவோர்கள் வைணவர்கள். கி.பி. 9ஆம் நூ. இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த 12 ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பு. தொகுத்தவர் நாதமுனிகள்.

பொய்கையாழ்வார் . காஞ்சிபுரத்தில் கோயிலின் பொய்கையில் பிறந்ததால் இப்பெயர் பெற்றார். பாடியது முதல் திருவந்தாதி. 100 பாடல்களால் ஆனது.

பூதத்தாழ்வார் :- இவர் திருமாலை கடல்வண்ணன், பூதம், என்றெல்லாம் உருவகித்துப் பாடியுள்ளதால் இப்பெயர் பெற்றார். பாடியது இரண்டாம் திருவந்தாதி.

பேயாழ்வார் :- இவர் பக்திப் பெருக்கினால் அழுவதும், சிரிப்பதும் ஆடுவதும், பாடுவதுமாக பேய் பிடித்தவர் போல் நடந்து கொண்டதால் இப்பெயர் பெற்றார். ஊர் மயிலாப்பூர், பாடல்கள் 100. இது மூன்றாம் திருவந்தாதி என அழைக்கப்பட்டது.

திருமழிசையாழ்வார் :- தொண்டை நாட்டிலுள்ள திருமழிசையில் பிறந்தவர். 216 பாடல்கள் அடங்கிய நான்முகன் திருவந்தாதியும், திருச்சந்த விருத்தமும் இவர் பாடியவை.

மதுரகவியாழ்வார் :- இவர் திருக்கோளூரில் பிறந்தவர். இவர் பாடியவை மொத்தம் 10 - பாடல்கள்தான்

நம்மாழ்வார் :- இவர் திருக்குருகையில் பிறந்து 16 ஆண்டுகள் ஊமையாகிருந்து, திருமாலின் அருளால் பாடல் புனைந்தார். பாடியவை திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகியன. மொத்தம் 1359 பாடல்கள்

பெரியாழ்வார் :- விஷ்ணுசித்தர் என்றும் அழைக்கப்பட்டார். ஊர் - ஸ்ரீவில்லிபுத்தூர். பாடியவை திருப்பல்லாண்டு, திருமொழி. மொத்தம் 473 பாடல்கள்.

ஆண்டாள் :- ஆழ்வார்களில் பெண் கவி. நாச்சியார் என்ற பெயர் கொண்டவர். இவர் பாடியவை திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி. 173 பாடல்கள் கொண்டது.

தொண்டரடிப்பொடியாழ்வார் :- சோழநாட்டுத் திருமண்டங்குடியில் பிறந்தவர். இவர் பாடியது திருப்பள்ளியெழுச்சி. மொத்தம் 10. பாடல்கள்.

திருமங்கையாழ்வார் :- சோழநாட்டில் திருமங்கை என்ற ஊரில் பிறந்தவர். பாடியவை பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகியன. 1137 - பாடல்கள்

குலசேகராழ்வார் :- சேரநாட்டில் திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர். இவர் 105 பாடல்கள் கொண்ட பெருமாள் திருமொழி இயற்றினார். வடமொழியில் முகுந்தமாலை என்ற நூலையும் எழுதியுள்ளார்.

திருப்பாணாழ்வார் :- உறையூரில் தோன்றியவர். பத்து பாடல்கள் அடங்கிய அமலனாதிபிரான் பதிகம் பாடியுள்ளார்.

பக்தி இலக்கியங்களும் அதிகாரங்களுக்கு எதிரான போக்கும் என்ற தலைப்பில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் வாழ்ந்த காலகட்டங்களில் அரசர்கள் பட்ட அடக்குமுறைகள் அதற்கு எதிரான குரல்கள் எல்லாம் வகை, [illegible]த்தைக் கொண்டு அடையாளத்தைக் கட்டமைத்து தமிழையும் மக்களையும் மீட்டெடுத்த நிலை சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

## 3. மொழி இலக்கியங்களைத் தரப்படுத்தும் முயற்சி

தமிழ் இலக்கியம் காலந்தோறும் பல்வேறு நிலையும் வடிவத்திலும் மாறி மாறி வளர்ந்துள்ளன. சோழர் கால மொழியியல் அறிஞர்கள் பல்வேறு இலக்கணங்களை வகுத்துத் தந்துள்ளனர்.

மொழி இலக்கண நூல் :- சோழர் காலத்தில் தமிழைக் கற்பத்துக் கொள்வதற்குப் பெரும் துணையாக இருந்த இலக்கண நூல் 'நன்னூல்' ஆசிரியர் பவணந்தி முனிவர். 13-ம் நூ.

பொருள் இலக்கண நூல் :- இடைக்காலத்தில் தோன்றிய அகத்திணை இலக்கண நூல்களாக இறையனார் அகப்பொருள்,

மாறன் அகப்பொருள், தமிழ் நெறி விளக்கம், நம்பியகப்பொருள் ஆகிய நூல்கள் விளங்குகின்றன.

<u>இறையனார் அகப்பொருள்</u> :- கி.பி. 8-ம் நூ. களவு மதுரையில் சிவனே இயற்றினார். நூலாசிரியர் இறையனார் ஆவர். ஆசிரிய நக்கீரனின் உரை கிடைக்கிறது. இதில் அகப்பொருள் இலக்கணம் 60 நூற்பாக்களில் சுருக்கித் தரப்பட்டுள்ளது.

<u>மாறன் அகப்பொருள்</u> :- ஆசிரியர் திருக்குருகைப் பெருமாள். 10-ஆம் நூ. இது களவியல், கற்பியல், வரைவியல் என மூன்று இயல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

<u>தமிழ் நெறி விளக்கம்</u> :- கி.பி. 12-ம் நூ. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பொருளியல் என்ற ஒரு தலைப்பில் அகப்பொருள் இலக்கணத்தை அமைத்துள்ளது. 21 நூற்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

<u>நம்பி அகப்பொருள்</u>. கி.பி. 13-ம் நூ. ஆசிரியர் நாற்கவிராச நம்பி என்னும் சமணராவார். நம்பி அகப்பொருள் விளக்கம் என்பது இதன் முழுப்பெயராகும். அகத்திணையியல், களவு, கற்பு, வரைவு, ஒழிபியல் என 5 இயல்களைக் கொண்டுள்ளது.

<u>புறப்பொருள் வெண்பாமாலை</u> :- புறப்பொருள் இலக்கணத்தை விளக்கக்கூடியது. கி.பி. 9-ம் நூ. ஆசிரியர் ~~[illegible]~~ ஐயனாரிதனார் ஆவார். வெண்பாவால் இயற்றப்பட்டதால் இப்பெயர் பெற்றது. தொல்காப்பியர் 7 திணைகளாக விளக்குவதை இவர் 12 திணைகளாகப் பகுத்து விளக்கியுள்ளார். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொது, கைக், பெருந். என்பன.

<u>யாப்பருங்கலக் காரிகை</u> :- யாப்பிலக்கணத்தை அழகுக் காரிகைக்குச் சொல்லும் மகடூஉ முன்னிலையில் செய்யப்பட்டு இருப்பதால் இப்பெயர் பெற்றது. ஆசிரியர் அமிதசாகரர். 11-ம் நூ. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று இயல்களைக் கொண்டது. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவற்றை விளக்குகிறது.

<u>யாப்பருங்கலம்</u> :- ஆசிரியர் அமிதசாகரர். காரிகையை அடுத்து வந்தது. இந்நூலைத்தான் முதலில் விரிவாக எழுதினார். குணசாகரர் உரை எழுதியுள்ளார். செய்யுளின் வரலாற்றையும் மாற்றங்களையும் ஆராய்ந்து தெளிவாக இது விளங்குகிறது.

**அணியிலக்கண நூல்கள் :-** இடைக்காலத்தில் பல வேறு அணியிலக்கண நூல்கள் தோன்றின. அவை அலங்கார நூல்கள் என அழைக்கப்பட்டன. இவற்றில் தண்டியலங்காரம், மாறன் அலங்காரம் சிறப்புற்று விளங்கின. தண்டியலங்காரம் - காவ்யதர்சம் என்ற சமஸ்கிருத அலங்கார நூலைத் தழுவி எழுதப்பட்டது. காலம் கி.பி. 11-ம் நூ. ஆசிரியர் தண்டி ஆவார். மூன்று இயல்களை உடையது, பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்பன. 37 - வகையான அணிகள் சொல்லப்பட்டுள்ளன. மாறன் அலங்காரம் - ஆசிரியர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இதில் 321 அணிகள் பற்றிய குறிப்புகள் உள்ளது.

**ஐந்திலக்கண நூல்கள் :-**

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியிலக்கணம் என உள்ள ஐந்து இலக்கணத்தையும் சேர்த்து ஐந்திலக்கண நூல்கள் தோன்றின. அவை இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சாமிநாதம் ஆகிய நூல்களைக் குறிப்பிடுபவையாகவும் அமைந்தனவாகும்.

**இலக்கண விளக்கம் :-** ஆசிரியர் வைத்தியநாத தேசிகர், குட்டித் தொல்காப்பியம் என்றும் அழைக்கப்பட்டது. 17-ம் நூற்றாண்டு.

**தொன்னூல் விளக்கம் :-** ஆசிரியர் வீரமாமுனிவர். இத்தாலியப் பாதிரியான காண்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி 1730-ல் எழுதி 1838-ல் புதுச்சேரியில் பதிப்பிக்கப்பட்டது. 370 நூற்பாக்கள் உள்ளன.

**முத்துவீரியம் :-** ஆசிரியர் முத்துவீர உபாத்தியாயர், 19-ம் நூ. 1289 நூற்பாக்களை உடையது. ஐந்திலக்கண நூல்களில் இதுவே மிகப் பெரியதாகும்.

**[illegible] :-**

**[illegible] :-**

**இலக்கணக் கொத்து :-** 17-ம் நூ. ஆசிரியர் சுவாமிநாத தேசிகர், வடமொழிச் சார்பு கொண்டவர், பாண்டிய நாட்டுக் காரர், தமிழில் சிறப்பாக உள்ள ற, ன, ழ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்தே தமிழ் எழுத்து, மற்றவை சமஸ்கிருதத்திற்கு உரியவை என்றார்.

நிகண்டுகள் :- நாம் இன்று அகராதி அல்லது அகரமுதலி என்று சொல்வதைத் தான் இடைக்காலத்தில் நிகண்டு என்று அழைத்தனர். அவை - திவாகர நிகண்டு - கி.பி. 9-ம் நூ. ஆசிரியர் திவாகர முனிவர். 12 பகுதிகளைக் கொண்டது. 9500 சொற்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. பிங்கல நிகண்டு- ஆசிரியர் பிங்கல முனிவர். 10-நூ. பிங்கலம் என்ற பெயரும் உண்டு. சூடாமணி நிகண்டு- ஆசிரியர் மண்டல புருடர், 16-ம் நூ. மற்றும் 10-ம் நூ. சேர்ந்தவர் என்றும் சொல்லப்படுகிறது இதில் 11000 சொற்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. உரிச்சொல் நிகண்டு- ஆசிரியர் காங்கேயர். 14-ம். நூ. இதில் 3200 சொற்களுக்கு விளக்கம் உள்ளது. கயாதர நிகண்டு- கயாதர முனிவரால் இயற்றப்பட்டது கி.பி.15-ம்.நூ. தனக்கு முற்பட்ட நூல்களின் சொற்களைப் பற்றி விளக்குகிறது. ஆசிரிய நிகண்டு- ஆசிரியர் ஆண்டிப்புலவர், உரை- வைத்தியநாத காலில் புகழ்ந்தவர். 17-ம்.நூ. இவ்வாறு நிகண்டு நூல்களும் இந்தக் காலகட்டத்தில் தோன்றின.

இலக்கண உரையாசிரியர்கள் :- நக்கீரர், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், நச்சினார்க்கினியர், மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர்,

இலக்கிய உரையாசிரியர்கள் :-
அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலியோர்கள்.

## வினா வங்கி

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. ஐஞ்சிறுகாப்பியங்களைக் குறிப்பிடு
2. ஐம்பெருங்காப்பியங்களைக் குறிப்பிடு
3. இரட்டைக் காப்பியங்களைக் குறிப்பிடு
4. சிலப்பதிகாரம் எத்தனை காதைகளை உடையது?
5. மணிமேகலை எத்தனை காதைகளை உடையது.?
6. குண்டலகேசியின் ஆசிரியரைக் குறிப்பிடு ?
7. நீலகேசி எத்தனை சருக்கங்களையுடையது.?
8. நாலடி நூலைப் பாடல்களைத் தொகுத்தவர் யார்.?
9. தேவாரப் பாடல்களைத் தொகுத்தவர் யார்.?
10. சுந்தரர் தேவாரம் எத்தனை பாடல்களையுடையது.?

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

11. பன்னிரு ஆழ்வார்களைக் குறிப்பிடுக.?
12. பன்னிரு திருமுறை நூல்களை வரிசைப்படுத்துக!
13. பெரியபுராணம் குறித்து எழுதுக.!
14. சமயக்குரவர்கள் பற்றி குறிப்பிடுக.?
15. புறப்பொருள் வெண்பா குறித்து எழுதுக.?
16. யாப்பருங்கலக் காரிகை பற்றி குறிப்பிடுக.?
17. நிகண்டு நூல்கள் பற்றி எழுதுக.!
18. இலக்கண உரையாசிரியர்கள் பற்றி விவரி.?
19. இலக்கிய உரையாசிரியர்கள் இருவர் குறித்து எழுதுக.!
20. எட்டாம் திருமுறை குறித்து எழுதுக.?

## விரிவான விடை

21. ஐம்பெருங்காப்பியங்கள் குறித்து எழுதுக.?
22. இரட்டைக் காப்பியங்கள் பற்றி எழுது?
23. ஐஞ்சிறு காப்பியங்கள் பற்றி விவரிக்க.
24. பன்னிரு திருமுறை நூல்கள் பற்றி விரிவாக எழுது
25. பக்தி இலக்கியங்களில் அதிகாரங்களுக்கு எதிரான
நூல்கள் பற்றி விவரி.?
26. நிகண்டுகள் குறித்து எழுதுக.?
27. அகத்திணை இலக்கண நூல்கள் பற்றி விவரி.?
28. ஐந்திலக்கண நூல்கள் பற்றி விவரி.?